**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 339 நாள்: 26.10.2025

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு,பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 3566 பணியாளர்கள் மூலம், கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மழைக்கால நோய்ப் பரவலை தடுக்கும் விதமாக, சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன மேலும் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணிகளும், புகை பரப்பும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

17.10.2025 முதல் 25.10.2025 வரை பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நிலையான மருத்துவ முகாம் மற்றும் நடமாடும் மருத்துவ முகாம் என மொத்தம் 553 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன இம்மருத்துவ முகாம்களில் 22,989 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்

மேலும் கொசு ஒழிப்பு நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 2200 பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று நீர்த் தொட்டிகள், பழைய டயர்கள், பாத்திரங்கள், நீர் தேங்கும் இடங்கள், பொது இடங்கள் உள்ளிட்டவற்றை ஆய்வு மேற்கொண்டு டெங்குவை ஏற்படுத்தும் ஏடிஎஸ் கொசுப்புழு ஒழிப்பு

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.மேலும் இதுகுறித்து மக்களிடையே விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர, 1366 பணியாளர்கள் மூலம் மக்கள் குடியிருக்கும் இடங்களில் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணிகளும், புகை பரப்பும் பணிகளும், தேவையான இடங்களில் ப்ளீச்சிங் பவுடர் தெளிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன

இப்பணிக்காக 15 மண்டலங்களில் உள்ள 200 வார்டுகளில் கொசு ஒழிப்பு மருந்து தெளிப்பு பணிகள் மற்றும் புகைபரப்பும் பணிகளுக்காக 293 விசைத் தெளிப்பான்கள், 49 பவர் ஸ்பிரேயர்கள், 132 பேட்டரி ஸ்ப்ரேயர்கள், 272 கையால் இயக்கக்கூடிய புகைபரப்பும் இயந்திரங்கள், ஒரு சிறிய புகைபரப்பும் இயந்திரம், 92 வாகனத்தில் புகைபரப்பும் இயந்திரங்கள் என மொத்தம் 839 இயந்திரங்களும், நீர்வழிக் கால்வாய்களில் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 15 வாகனத்துடன் கூடிய ஸ்பிரேயர்களும் என மொத்தம் 854 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 3 டிரோன்கள் மூலம் அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கூவம் ஆறு ஆகியவற்றில் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**